# போடிநாயக்கனூர் நகராட்சி

## 2021–2022 ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

### 1. அமைப்பும் நிர்வாகமும்

**எல்லை :**

அரசாணை எண்.1203, உள்ளாட்சி மற்றும் நகராட்சி துறை நாள். 11.7.1916–ன்படி போடிநாயக்கனூர் நகராட்சி 01.09.1916ஆம் நாள் முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக அமைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் 18.08.1966ஆம் நாளிட்ட 2008 எண் அரசாணைப்படி 05.10.1966ஆம் நாள் முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்குதுறையின் அரசு ஆணை(நிலை)எண்.85(நநி.5) நாள் 22.5.98–ன்படி முதல்நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சிப் பகுதிக்குள் போடிநாயக்கனூர், ஜக்கமநாயக்கன்பட்டி, திருமலாபுரம், குலாலர்பாளையம் மற்றும் புதுார் ஆகிய வருவாய் கிராமங்கள் அடங்கும்.

**பரப்பளவு :**

1962ஆம் ஆண்டில், இந்நகரின் பரப்பளவு 4.41 சதுர கிலோமீட்டர்களாக இருந்தது. இப்போது 7.23 சதுர கிலோமீட்டர்களாக விரிவடைந்துள்ளது. இந்நகரின் எல்லைக்குள் அடங்கிய மேற்குப்பகுதி நிலங்களை நகராட்சி எல்லைக்குள் சேர்த்ததால் 7.23 சதுர கிலோமீட்டர் பரப்பளவாக தற்போது உள்ளது.

அறிக்கையாண்டில் இந்நகராட்சி முதல்நிலை நகராட்சியாக தொடர்ந்து இருந்து வருகிறது.

**மக்கட்தொகை :**

2011ம் ஆண்டு மக்ககள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 77,675 ஆகும்.

| ஆண்கள் | பெண்கள் |
|---|---|
| 37498 | 38177 |

**பகுதிகள் :**

11.6.1996ஆம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(நகராட்சி தேர்தல்) துறையின் 135ஆம் எண் அரசாணையில் 2001ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கேற்ப 33 வார்டுகளாக பிரித்து அனுமதிக்கப்பட்டு உள்ளது. 20.05.2019ம் தேதிய அரசிதழில் பகுதி–II–பிரிவு–2ன் படியான தேர்தல் அறிவிக்கையின்படி, பெண்கள் வார்டு 3,4,5,6,8,11,13,16,17,22,24,25,28,32,33ஆகிய 15,18,27 வார்டுகளும், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர் வகுப்பினருக்கு (பொது) ஆகிய வார்டுகளும் மீதமுள்ள 15 வார்டுகள் பொதுப்பிரிவினருக்கும் ஒதுக்கப்பட்டன.

**அ) மன்றம் :**

02.03.22 ஆம் நாள் முதல் நகராட்சி வார்டுகளுக்கு கீழ்க்கண்டவர்கள் நகர்மன்ற உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

| வ.எண் | பெயர் | | வார்டு எண். |
|---|---|---|---|
| 1. | திரு.ஜெகநாதன் பொ | : | 1வது வார்டு |
| 2. | திரு. மரைக்காயர் ஷேட் ஷ | : | 2வது வார்டு |
| 3. | திருமதி.சரஸ்வதி ஆ | : | 3வது வார்டு |

| | | | |
|---|---|---|---|
| 4. | திருமதி.ரதியாபானு சா | : | 4வது வார்டு |
| 5. | திருமதி.முத்துமணி ச | : | 5வது வார்டு |
| 6. | திருமதி.கலைச்செல்வி சே | : | 6வது வார்டு |
| 7. | திரு.ராஜசேகர் ப | : | 7வது வார்டு |
| 8. | திருமதி.ஸ்ரீ சுபா கிருஷ்ணா ர கோ | : | 8வது வார்டு |
| 9. | திரு.மணிகண்டன் சு | : | 9வது வார்டு |
| 10. | திரு.பாலசுப்பிரமணி பி | : | 10வது வார்டு |
| 11. | திருமதி.ராஜேஸ்வரி ரா | : | 11வது வார்டு |
| 12. | திரு.பிரபாகரன் ம | : | 12வது வார்டு |
| 13. | திருமதி. தனலட்சுமி க | : | 13வது வார்டு |
| 14. | திருமதி.கலையரசி முருகன் மு | : | 14வது வார்டு |
| 15. | திரு.ராஜா ப | : | 15வது வார்டு |
| 16. | திருமதி.எத்திலாக்கம்மாள் வே | : | 16வது வார்டு |
| 17. | திருமதி.சித்ராதேவி த | : | 17வது வார்டு |
| 18. | திருமதி.ஜெயந்தி ர | : | 18வது வார்டு |
| 19. | திரு.வெங்கடேஷ்குமார் எஸ் | : | 19வது வார்டு |
| 20. | திரு.மகேஸ்வரன் இ | : | 20வது வார்டு |
| 21. | திருமதி.ராஜராஜேஸ்வரி ச | : | 21வது வார்டு |
| 22. | திருமதி.கலைவாணி கோ | : | 22வது வார்டு |
| 23. | முருகேசன் க | : | 23வது வார்டு |
| 24. | திருமதி.தாரண்யா ச | : | 24வது வார்டு |
| 25. | திருமதி.கிருஷ்ணவேணி அ | : | 25வது வார்டு |
| 26. | திரு.மொக்கைச்சாமி சி | : | 26வது வார்டு |
| 27. | திருமதி.லதா ச | : | 27வது வார்டு |
| 28. | திருமதி.கஸ்தூரி ர | : | 28வது வார்டு |
| 29. | திரு.சங்கர் ம | : | 291வது வார்டு |
| 30. | திரு.பெருமாள் கி | : | 30வது வார்டு |
| 31. | திரு.ரமேஷ்குமார் ப | : | 31வது வார்டு |
| 32. | திருமதி.வீரமணி ரா | : | 32வது வார்டு |
| 33 | திருமதி. கனகவள்ளி ரஞ்சித்குமார் | : | 33வது வார்டு |

04.03.22ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்றத் தலைவர் தேர்தலில் திருமதி.ச.ராஜராஜேஸ்வரி அவர்கள் நகர் மன்றத் தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.(வாக்கு எண்ணும் பணி நடைபெற்ற நாள்.19.02.22, பதவி ஏற்றுக்கொண்ட நாள்.04.03.2022

04.03.2022ஆம் நாள் நகர்மன்ற உறுப்பினர்களிடையே நடைபெற்ற நகர்மன்றத்துணைத் தலைவர் தேர்தலில் 28வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ர.கஸ்தூரி மற்றும் 25வது நகர்மன்ற உறுப்பினர் திருமதி.அ.கிருஷ்ணவேணி ஆகிய இருவர் போட்டியிட்டதில், திருமதி.அ.கிருஷ்ணவேணி அவர்கள் நகர்மன்றத் துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**ஆணையாளர் :**

01.04.2021 முதல் **31.03.2022** வரை திருமதி.தி.சகிலா, ஆணையாளராக பணியாற்றி உள்ளார்.

**மேலாளர் :**

01.04.2021 முதல்17.10.2021 முடிய திரு.கே.முரளி மேலாளராகவும் பின்பு 18.10.2021 முதல் 31.03.2022 முடிய திரு.பா.கோவிந்தராஜ் மேலாளராகவும் பணிபுரிந்து உள்ளார்கள் .

| **பணியாளர்கள் விபரம்** | | |
|---|---|---|
| மேலாளர் | – | 1 |
| உதவியாளர் | – | 3 (1 காலியிடம்) |
| இளநிலைஉதவியாளர் | – | 12 |
| தட்டச்சர் | – | 1 (காலியிடம்) |
| பதிவறை எழுத்தர் | – | 1 (காலியிடம்) |
| அலுவலக உதவியாளர் | – | 5 |
| வருவாய் ஆய்வர் | – | 1 (காலியிடம்) |
| வருவாய் உதவியாளர் | – | 8 |
| பேரூந்துநிலைய காவலர் | – | 1 |

**ஈ) பொறியாளர் :**

அறிக்கையாண்டில் **01.04.2021** முதல் **02.08.21** முடிய திரு.வீ.குணசேகர் நகராட்சி பொறியாராகவும். பின்பு **03.08.2021** முதல் **31.03.2022** முடிய திருமதி .ஐ.செல்வராணி , நகராட்சி பொறியாளராக பணியாற்றியுள்ளார்கள் .

**மன்றக்கூட்டங்கள் :**

அறிக்கையாண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத்தின் காலத்தில் **1** சாதாரணக் கூட்டம் நடைபெற்றுள்ளது. அதில் **15** பொருட்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு முடிவு செய்யப்பட்டது. கூட்டப்பொருள் அறிக்கையாண்டில் நிலுவை இல்லை.

| | | | **நடந்த கூட்டங்களின் எண்ணிக்கை** | | **முடிவு செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| 1. | நியமனக்குழு | : | – | : | – |
| 2. | ஒப்பந்தக்குழு | : | – | : | – |
| 3. | வரி மேல்முறையீட்டுக்குழு | : | – | : | – |
| 4. | உள்ளூர் திட்டக்குழு | : | – | : | – |

**மக்கள் சாசனம் :**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(பொதுத்துறை அரசாணைநிபிலை) எண்.58, 10.04.98இன்படி) மக்கள் சாசனம் அரசு நலத்திட்டங்கள் மற்றும் நடைமுறைகள் சேவைமையம் அமைத்தல் மக்கள் சாசனம் வெளியிடுதல் சம்பந்தமாக அறிவுரை வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சிகளில் பெரும்பாலும் பொதுமக்கள் கீழ்க்கண்ட தேவைகளுக்காகவும் அவற்றின் சேவைகளைப் பெற வேண்டிவரும்.

அ) குடிநீர் இணைப்புகள் பெற – 7 நாட்கள்(விண்ணப்பம் பெற்ற நாளிலிருந்து)
ஆ) பிறப்பு,இறப்பு சான்றிதழ்கள் பெற – 7 நாட்கள்
இ) கட்டிட வரைபடங்களுக்கான அனுமதி பெற – 30 நாட்கள்
ஈ) சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய – 15 நாட்கள்
உ) வணிக உரிமங்கள் பெற – 45 நாட்கள்
ஊ) அடிப்படை வசதிகளான – சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர், கழிவுநீர் போன்றவை பற்றிய புகார்கள் களைய நிர்வாகம் எடுத்துக்கொள்ளும் அதிகபட்ச காலம் ஆகியவை பற்றிய பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் மேற்கண்ட அரசு ஆணை வெளியிடப்பட்டது.

மேற்படி சேவைமையம் மூலம் பெறப்படும் பிறப்பு மற்றும் ,இறப்பு சான்றிதழ்கள் வழங்கும் பணி உரிய காலத்திற்குள் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. சில நேர்வுகளில் குறித்த நாட்களுக்குள் மேற்படி சான்றிதழ்கள் பெற விண்ணப்பதாரர்கள் வராமல் இருந்து விடுவதால் நிலுவை ஏற்பட்டு விடுகிறது. இதனை தடுக்க தற்போது அனைத்து சான்றிதழ் கோரும் விண்ணப்பங்களுடன்குறைந்த பட்ச அனுப்பும் செலவாக ரூ.5/– மட்டும் பெற்றுக்கொன்று சான்றிதழ் தபால் மூலம் (Certificate of Posting) அனுப்ப இந்நகர்மன்றத்தீர்மானம் எண்.327, நாள்.24.10.2000ம் தேதிய தீர்மானத்தின்படி ஒப்புதல் பெறப்பட்டு அதன்படி காலதாமதமின்றி மேற்படி சான்றுகள் அனுப்பப்பட்டு வரப்படுகிறது.

**அ) குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் :**

**1. புகார் பெறுதல் :**

இந்நகராட்சியில் குடிநீர் வழங்கல் தொடர்பான புகார் பதிவேடுகள் தனியாக பாராமரிக்கப்பட்டு அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் புகார் பெறப்பட்டு சரிசெய்யப்பட்டு வருகின்றது.

**2. குடிநீர் விநியோகம் :**

பிரதான குழாய்களில் நீர் கசிவு சம்பந்தமான புகார் 7 நாட்களிலும் குடிநீர் மாசு மற்றும் அசுத்தம் சம்பந்தமான புகார் 10 நாட்களிலும் சுத்தமாக நீர்வரவில்லை அல்லது குடிநீர் வழங்குதலில் பழுது போன்றவற்றைச் சரிசெய்தல் 7 நாட்களிலும் அடிபம்புகள் பழுது பார்த்தல் உடனுக்குடன் சரிசெய்யப்பட்டு வருகின்றது. குடிநீர் இணைப்பு விண்ணப்பங்கள் பெறப்பட்ட 7 நாட்களுக்குள் குழாய் இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகிறது.

**3. கழிவுநீர் அகற்றல் :**

துப்பரவுப் பணியாளர்களைக்கொண்டு தினந்தோறும் கழிவுநீர் அகற்றப்பட்டு வருகிறது.

கட்டிட விண்ணப்பங்கள் அனுமதி வழங்குவது அல்லது மறுப்பது 30நாட்களும், பிறப்பு சான்று 3 நாட்களும், இறப்புச்சான்று 3 நாட்களும், சொத்துவரி பெயர் மாற்றம் 15 நாட்களும் சொத்துவரி விதிப்பு/புதிய கட்டிடம்/கூடுதல் கட்டிடம் 15 நாட்களுக்குள், பணிகளை முடித்து உத்தரவுகள் வழங்கப்பட்டு வருகிறது.

**சொத்துவரி வசூல் :**

இந்நகராட்சியில் 01.04.2021 முதல் 31.03.2022 முடிய சொத்துவரி வசூல் 81.87/% வசூலிக்கப்பட்டது. 2021–2022 ஆம் ஆண்டு கேட்பு விபரம் கீழேக்கொடுக்கப்பட்டுள்ளது.

| சொத்துவரி வசூலிக்கக்கூடிய கேட்பு 2021–2022 | 31.03.2022ம் தேதிக்குள் வசூலிக்கப் பட்ட தொகை | 31.3.2022ம் தேதியில் வசூல் செய்த சதவிகிதம் |
|---|---|---|
| 24028884 | 19672789 | 81.87% |

**<u>கணினி மயமாக்குதல் :</u>**

நகராட்சி பணிகள் அனைத்தையும் கணினிமயமாக்குதல் என்ற நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் எண்.88735/97/ஜே4,நாள் 25.2.98–ன்படி கணனி மயமாக்குதல் பணியினை செய்ய உதவி திட்ட அமைப்பாளர் நிர்வாக ஆணையாளர் அவர்களால் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்.

**<u>பொறியியல் பிரிவு:</u>**

அறிக்கையாண்டில் ஒரு நகராட்சிப்பொறியாளர், ஒரு உதவிப்பொறியாளர், ஒரு படவரைவாளர் உள்பட கீழ்க்கண்ட விபரப்படி பணிபுரிந்து வருகிறார்கள்.

**<u>பணியாளர்கள் விபரம்</u>**

| | | |
|---|---|---|
| பொறியாளர் | – | 1 |
| உதவி பொறியாளர்/ இளநிலை பொறியாளர் | – | 1 |
| வரைவாளர் | – | 1 |
| அலுவலக உதவியாளர் | – | 1 |

**<u>சாலைகள், பாலங்கள் மற்றும் கட்டிடங்கள் :</u>**

இந்நகராட்சி கீழ்க்கண்டவாறு 88.347 கிலோமீட்டர்கள் நீளசாலைகளை பராமரித்து வருகிறது.

| | | 2021–2022 |
|---|---|---|
| 1 | கான்கீரிட் சாலைகள் | 11.09 கி.மீ |
| 2 | தூசி படியாத சாலைகள்(தார்) | 45.227 கி.மீ. |
| 3 | சரளை பரப்பிய சாலைகள் | 5.527 கி.மீ. |
| 4 | கற்கள் பரப்பிய சாலைகள் (பேவர் பிளாக்) | 26.503 கி.மீ |
| | **மொத்தம்** | **88.347 கி.மீ.** |

**2021–22ம் ஆண்டு திட்ட செயலாக்கம் –**
**நூற்றாண்டு நிறைவு நிதி**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.22 புதுத்தெருவில் தினசரி மார்க்கெட்டில் 40 கடைகள் கட்டுதல் | 150 |
| 2 | மயானத்தில் தியான மண்டபம், சுற்றுச்சுவர், உள் சாலை அமைத்தல், மின் வசதி மற்றும் தண்ணீர்வசதி செய்தல் | 100 |
| 3 | சுப்புராஜ் நகரில் நகராட்சி பயணியர் தங்கும் விடுதி கட்டுதல் | 100 |
| 4 | போடிநாயக்கனூர் நகராட்சியில் மூன்று இடங்களில் பொது சுகாதார பிரிவு அலுவலகம் கட்டுதல் | 70 |
| 5 | சீனிவாசன் லே அவுட்டில் பூங்கா அமைத்தல் மற்றும் சுப்புராஜ் நகர் பூங்கா மேம்படுத்துதல் | 1.00 |
| 6 | வஉசி நகர் நடுப்பட்டி விஸ்தரிப்பு பகுதியில் உள்ள பூங்கா மேம்படுத்துதல் | 30 |
| 7 | தேனி – மூணாறு சாலை, காமராஜ் பஜார், பாளையம் சாலை, பெரியாண்டவர் புரம் சாலை மற்றும் சண்முக சுந்தரம் சாலையில் அலங்கார தெரு விளக்குகள் அமைத்தல் | 150 |
| 8 | நகரில் விடுபட்டுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய் பதித்தல் | 200 |
| 9 | பேருந்து நிலையத்தில் ஓடுதளம் அமைத்தல், கடைகள் கட்டுதல், வாகனம் நிறுத்துமிடம் அமைத்தல் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 300 |
| 10 | வார்டு எண்.20 தென்றல் நகரில் வாரச்சந்தையில் 75 கடைகள் கட்டுதல் | 250 |
| 11 | சிறைக்காடு உரக்கிடங்கில் உள்ள திடக்கழிவுகளை பயோ மைனிங் முறையில் அகற்றுதல் | 250 |
| 12 | வார்டு எண்.1,2,3,4,5,6,7,8–ல் உள்ள வலசதுறை ரோடு, புதூர் வடக்கு தெரு, புதூர் கிழக்கு தெரு பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி மற்றும் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 300 |
| 13 | வார்டு எண்.5,8,9,10,11,12,14–ல் உள்ள சுப்பு தெரு, சர்ச் ரோடு, தெற்குராஜ வீதி பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி மற்றும் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 300 |
| 14 | வார்டு எண்.12,13,14,15,20ல் உள்ள காந்திநகர் கருப்பசாமி கோவில் தெரு, வருவாய் ஆய்வாளர் தெரு, பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி மற்றும் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 300 |
| 15 | வார்டு எண்.16,17,19,21,22,24–ல் உள்ள பட்டாளம்மன் கோவில் தெரு, பஜார் தெரு, போஜராஜ் தெரு பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி மற்றும் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 300 |
| 16 | வார்டு எண்.20,21,23,24,27ல் உள்ள போடிமெட்டு சாலை, மாணிக்கவாசகர் தெரு, பிள்ளையார் கோவில் தெரு, பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி மற்றும் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 300 |
| 17 | வார்டு எண்.23,25,26,27,29,30,31 ல் உள்ள சுந்தர பாண்டியன் தெரு, கோட்டை கருப்பசாமி கோவில் தெரு, பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி மற்றும் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 300 |
| 18 | வார்டு எண்.32 ல் உள்ள சுப்புராஜ் நகர் தெரு எண்.1,2,3, 4,5,6,7,8,9,10,12,13,14,15, ரயில் நிலைய சாலை மற்றும் சூர்யா நகரில் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி மற்றும் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 300 |

| | | |
|---|---|---|
| | | |
| 19 | வார்டு எண்.2,33 ல் உள்ள புதுகாலனி தெரு எண்.1,3,4, 4வது குறுக்கு தெரு, சுப்புராஜ் நகர் தெரு எண்.11, சண்முகசுந்தரம் லே அவுட் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி மற்றும் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 300 |
| 20 | தேனி– மூணாறு சாலை, காமராஜ் பஜார், பாளையம் சாலை, பெரியாண்டவர் புரம் சாலை, தெற்கு ராஜ வீதி மற்றும் கிழக்குவெளி வீதியில் மழைநீர்வடிகால் கட்டுதல் | 250 |
| 21 | வஞ்சி ஓடையில் வெள்ளத் தடுப்புச்சுவர் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 650 |

## 15 வது நிதிக்குழு மான்யம் 2020–21 (Tied)

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் |
|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மையில் வார்டு எண்.2ல் உள்ள மயானக்கரை ரஸ்தாவில் வள மீட்பு கொட்டகை கட்டுதல் | 50.00 |
| 2 | பழைய உரக்கிடங்கு பகுதியில் பயோமைனிங் முறையில் குப்பைகளை முற்றிலும் அகற்றிய இடத்தில் சுற்றுச்சுவர் கட்டும் பணி | 29.75 |
| 3 | தென்றல் நகரில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி பகுதிகளில் சுற்றுச்சுவர் கட்டும் பணி | 12.00 |
| 4 | தர்மத்துப்பட்டியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமையவுள்ள இடத்தில் சுற்றுச்சுவர் மற்றும் அணுகு சாலை அமைத்தல் பணி | 30.00 |
| 5 | திடக்கழிவு மேலாண்மைக்கு தேவையான (5 எண்ணம்) 60கிலோ எடையிலான பிளாஸ்டிக் கழிவுகளை கட்டும் இயந்திரம் (Baling Machine 60kg Capacity) | 33.75 |
| 6 | இந்நகராட்சி பாதாளச்சாக்கடை திட்டப்பணிக்காக Robotic Vehicles வாங்கும் பணி. | 40.00 |
| 7 | இந்நகராட்சியில் வார்டு எண்.33 ல் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி | 4.20 |
| 8 | திடக்கழிவு மேலாண்மையில் கீழ் 3T திறன் கொண்ட 2 எண்ணம் பிளாஸ்டிக் துண்டாக்கும் இயந்திரம் வாங்கும் பணி. | 9.00 |
| | | 208.70 |

## 15 வது நிதிக்குழு மான்யம் 2020–21 (Un-Tied)

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்–2, மயானம் குறுக்குசாலை எண்–2 (120002R028) மயானம் குறுக்குசாலை எண்–3 (120002R029), மயானம் குறுக்குசாலை எண்–4 (120002R030), மயானம் குறுக்குசாலை எண்–5 (120002R031), மயானம் குறுக்குசாலை எண்–6 (120002R032) காசி விஷ்வநாதன் தெரு பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி | 50.00 |
| 2 | வார்டு எண்–15 அம்பிகாவதி தெரு (120015R185),குறுக்கு தெரு எண்.1(120015S046), குறுக்கு தெரு எண். 2 (120015L030), குறுக்கு தெரு எண்.3(120015R186) ,கம்பர் தெரு (120015R184) மற்றும் அய்யணன் தெரு (120014R181) பேவர் ப்ளாக் சாலை அமைக்கும் பணி | 15.40 |
| 3 | வார்டு எண்–10, வ,உ.சி நகர் நடுத்தெருவில் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி (120012R120) | 16.00 |

## 15 வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Tied)

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் |
|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சிக்கு குடிநீர் பணி பராமரிப்பிற்காக நீர்மூழ்கி பம்பு மற்றும் பேனல் போர்டு விநியோகம் செய்யும் பணி. | 50.00 |
| 2 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி தரைதள தொட்டிக்கு பதிலாக மேல்நிலை தொட்டியாக மாற்றவும் கூடுதல் குழாய் அமைக்கும் பணி | 15.40 |
| 3 | வார்டு எண்–2 ஜமீன் தோப்பு தெருவில் BOV/LCV வாகனம் நிறுத்தவும் அதற்கு சார்ஜர் வசதியுடன் கூடிய மேற்கூரை அமைக்கும் பணி | 16.00 |
| 4 | வார்டு எண்–22 குலாளர் பாளையத்தில் BOV/LCV வாகனம் நிறுத்தவும் அதற்கு சார்ஜர் வசதியுடன் கூடிய மேற்கூரை அமைக்கும் பணி | 13.40 |
| 5 | வார்டு எண்–32ல் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு சுற்றுசுவர் அமைத்து பழுதடைந்த படிகட்டுகளுக்கு பதிலாக புதிய படிகட்டு அமைக்கும் பணி | 9.00 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 53 liter Wheeled Skid Steer Loader with multi-purpose bucket and Operating load 1538 kilogram விநியோகம் செய்யும் பணி | 25.00 |
| 7 | திடக்கழிவு மேலாண்மை பணிக்கு Organic waste shredder machine motor(1ton/hr) 2 எண்ணம் விநியோகம் செய்யும் பணி | 10.00 |
| 8 | வார்டு எண் –2 வேட்டைகாரசாமி கோவில் தெருவில் பேவர்ப்ளாக் சாலை அமைக்கும் பணி (12000IR011)0 | 17.50 |
| 9 | பாதாள சாக்கடை பணிக்கு தேவையான ஆள் இறங்கும் தொட்டிக்கு மூடிகள் வாங்கும் பணி | 0.60 |
| | | 128.00 |

## 15 வது நிதிக்குழு மான்யம் 2021–22 (Un-Tied)

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண் –2 வேட்டைகாரசாமி கோவில் தெருவில் பேவர்ப்ளாக் சாலை அமைக்கும் பணி (12000IR011) | 17.50 |

## 15 வது நிதி மான்யம் ,தேசிய UHWC–2021-22

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.2,ஜமீன் தோப்பு ரோட்டில் **(UHWC)** நகர்புற சுகாதார நலவாழ்வு மையம் கட்டிடம் கட்டும் பணிகள் செய்தல் | 25.00 |

## NUHM–2020-21

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் |
|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி தென்றல் நகர் ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டிடம் கட்டும் பணி | 15.00 |

## கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22 (Un-Tied)

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் |
|---|---|---|
| 1 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (KNMT) சாலைகள், மழைநீர் வடிகால்கள் மற்றும் சிறுபாலம் | 115.91 |
| 2 | போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்.22,குலசேகர பாண்டியன் லே–அவுட்டில் பூங்கா அபிவிருத்தி பணிகள் | 40.00 |
| | | 155.91 |

## MP Fund

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் |
|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி சுப்புராஜ் நகர் சிட்னி விளையாட்டு மைதானத்தில் நடைபாதை அமைக்கும் பணி | 15.00 |

## MLA Fund

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் |
|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி பரமசிவன் கோயில் செல்லும் சாலையில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் பாலம் அமைத்தல் | 20.00 |
| 2 | போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்18–ல், நாடார் பள்ளி அருகில் புதிய கழிப்பிடம் கட்டுதல் | 15.00 |
| 3 | போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்–20 தென்றல் நகரில் சமுதாயகூடத்திற்கு சமையல் கூடம் மற்றும் ஆண் ,பெண் கழிப்பிடம் கட்டுதல் | 15.00 |
| 4 | வார்டு எண்–2 ஜமீன் தோப்பு தெருவில் நியாய விலைக்கடை கட்டுதல் | 15.00 |

இந்நகராட்சி மேற்குமலைத் தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள பெரியாண்டவர் நெடுஞ்சாலை காமராஜ் பஜார், பெரியகுளம் சாலை, குரங்கணி சாலை முதலியன நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**அலுவலகக் கட்டிடங்கள் :**

கீழ்க்கண்ட கட்டிடங்கள் அறிக்கை ஆண்டில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன.

1. நகராட்சி அலுவலகம்
2. பேரூந்து நிலையம்
3. இரண்டு மேல்நிலைப்பள்ளி,ஒரு உயர்நிலைநிலைப்பள்ளியும், ஒரு ஆரம்பப்பள்ளியும்.
4. ஆடு வதை செய்யுமிடம்
5. குரங்கணியில் காவலர் குடியிருப்பு
6. தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம்
7. குளியலறைகள்
8. கழிப்பறைகள்
9. தினசரி சந்தை
10. வாரச்சந்தை
11. அலுவலர் குடியிருப்பு
12. தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டி–1
13. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.பள்ளி கல்வி சத்துணவுமையங்கள்–4
14. மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள்–2
15. புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்.
16. காமராஜ் பஜாரிலுள்ள வணிக வளாகக் கட்டிடங்கள்
17. ஆணையாளர் குடியிருப்பு
18. வாரச்சந்தையில் உள்ள தங்கும் விடுதி
19. பேரூந்து நிலைய வணிகக்கடைகள்.
20. பேறுசார் மற்றும் குழந்தைகள் நலமையம்

**தளவாடங்களும்,கருவிகளும் :**

குடிநீர் போதுமான அளவு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாலும், குடிநீர் வழங்குவதற்கான முன்னர் பயன்படுத்தப்பட்டு வந்த டிராக்டரும், லாரியும் தற்போது பயன்படுத்தப்படவில்லை.

**விளக்குகள் :**

| விளக்குகள் விபரம் | அறிக்கையாண்டில் உள்ளவை |
|---|---|
| 1x24 CFL Fiting | 2296 |
| 4x24 CFL Fiting | 230 |
| உயர் கோபுர மின்விளக்கு | 94 |
| 40w LED விளக்குகள் | 63 |
| | 2683 |

**ஆரம்பக்கல்வி :**

09.03.1990ம் நாளிட்ட கல்வித்துறை(சி1) சென்னை அவர்களின்அரசாணை எண்.347–க்கிணங்க 31.7.87ஆம் தேதிய கல்வித்துறை அரசாணை எண் 1344 ல் ஆணையிட்டுள்ள படியும் நகராட்சி பள்ளி ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் பள்ளி கல்வி இயக்குநர் நிர்வாகத்தில் இயங்க உத்தரவிடப்பட்டபடி ஊதியம் வழங்குவது ஆகியவற்றின் பொறுப்புக்களை 1.4.90 முதல் அரசு நிதியிலிருந்து வழங்க ஏற்றுக்கொண்டபடியால் இந்நகராட்சி பள்ளி ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் கல்வித்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்நகராட்சி 7வது வார்டு நடுநிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது. 10வது பகுதி உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**இடவசதி மற்றும் தளவாடங்கள் :**

நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்களில் 5 பள்ளிகளும் அமர்த்தப்பட்டுள்ளன. பள்ளிக்கட்டிடங்கள் அனைத்துக்கும் போதுமான காற்றோட்ட வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

**இடைநிலைக்கல்வி :**

–இல்லை–

தனியார் நிறுவனங்களின் மூலம் கீழ்கண்டவாறு பள்ளிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1. ஜமீன்தாரணி காமுலம்மாள்நினைவு மேல்நிலைப்பள்ளி
2. பங்கஜம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி
3. நாடார் மேல்நிலைப்பள்ளி
4. ஜமீன்தாரணி காமுலம்மாள் நினைவு ஆரம்பப்பள்ளி
5. சவுண்டீஸ்வரி நடுநிலைப்பள்ளி
6. ஸ்ரீகணேஷ் ஆரம்பப்பள்ளி
7. பங்கஜம் நடுநிலைப்பள்ளி
8. மூவேந்தர் நடுநிலைப்பள்ளி
9. ஆயிர வைசியா ஆரம்பப்பள்ளி
10. புத்தர் நினைவு நடுநிலைப்பள்ளி
11. நாடார் துவக்கப்பள்ளி
12. பிச்சாண்டி நடுநிலைப்பள்ளி
13. காதிரியா துவக்கப்பள்ளி
14. சண்முகர் அருள்நெறி துவக்கப்பள்ளி
15. ஸ்ரீகாமராஜ் வித்யாலயம்
16. அன்னை இந்திரா நினைவுத் துவக்கப்பள்ளி
17. ஸ்ரீசவுடாம்பிகா நடுநிலைப்பள்ளி
18. அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி(மேற்கு)
19. அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி(கிழக்கு)

**பொது நூலகம் :**

அறிக்கையாண்டில் இந்நகராட்சியால் நூலகங்கள் எதுவும் பராமரிக்கப்படவில்லை. மாவட்ட நூலக குழுவினரால் 2 நூலகங்கள் பராமரிக்கப்படுகிறது. நூலகத்திற்கு நூலகவரியாக

ரூ.28,36,558/— அறிக்கையாண்டில் வசூல் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட நூலகத்திற்கு அறிக்கையாண்டில் ரூ.25,18,949/— செலுத்தப்பட்டுள்ளது.ரூ.3,17,609/— செலுத்த வேண்டியுள்ளது.

**மருத்துவ வசதி :**

இந்நகராட்சியால் அறிக்கையாண்டில் மருத்துவமனைகள் எதுவும் பராமரிக்கப்படவில்லை. இந்நகரில் அரசு மருத்துவமனை ஒன்றுள்ளது. இந்நகராட்சியில் மருத்துவமனை கட்ட அப்போதைய பொதுநிதி ரூ.28,000— மதிப்புள்ள 5 சதுர ஏக்கர் நிலத்தைத் தானமாகக் கொடுத்து, 50 படுக்கைகளுடன் எல்லா வசதிகளுடனும் இம்மருத்துவமனை சிறந்த முறையில் இயங்கி வருகிறது.

**தடுப்பு மருந்துகள் :**

நகராட்சி எல்லையில் பொது சுகாதாரத்தைப் பேணவும், தொற்றுநோய்கள் பராவாமல் தடுக்கும் பொருட்டும், நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுஅறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு தடுப்பூசிகள் போடப்பட்டன.

**தடுப்பூசித்திட்டம் :**

நாடு தழுவிய தடுப்பூசித் திட்டத்தின் கீழ் இந்நகராட்சியில் ஒவ்வொரு புதன்கிழமையும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் மூலம் குழந்தைகள் மற்றும் கர்ப்பினி தாய்மார்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகின்றன.

IMMUNISATION ACHIEVEMENT REPORT FOR THE YEAR

| Sl.No. | Actitivity | Target | Achievement | Percentage |
|---|---|---|---|---|
| 1. | Infant | 670 | 670 | 100% |
| 2. | Penta valent Ist douc opu | 670 | 708 | 100% |
| 3. | Penta valent IInd douc opu | 670 | 698 | 100% |
| 4. | Penta valent IIIrd douc opu | 670 | 675 | 100.7% |
| 5. | Uleasler Measles | 670 | 665 | 99.2% |
| 6. | DPT Booster opu | 670 | 665 | 99.2% |
| 7. | 5yr DPT 2nd Booster | 910 | 910 | 100% |
| 8. | T.T 10yr | 890 | 890 | 100% |
| 9. | T.T 16yr | 1145 | 1145 | 100% |
| 10. | Anec Target TT 1&2 | 785 | 785 | 100% |
| 11. | FST (lask) | 785 | 785 | 100% |

போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் நடத்தி அனைத்து ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

**பணியாளர்களும் அலுவலர்களும் :**

அறிக்கையாண்டில் 18.02.2021 முதல் நகர்நல அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது.

ஐந்து துப்புரவு ஆய்வர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். ஐந்து துப்புரவு ஆய்வர்கள் துப்புரவு பணி ஆய்வு செய்தல், பிறப்பு, இறப்பு பதிவு சான்றிதழ் வழங்குதல் கணக்கெடுப்புப் பணிசெய்து வருகிறார்கள்.

**பணியாளர்கள் விபரம்**

| | | |
|---|---|---|
| துப்பரவு ஆய்வர்கள் | – | 5 |
| இளநிலை உதவியாளர் | – | – |
| பதிவரைஎழுத்தர் | – | – |
| துப்புரவு பணிமேற்பார்வையாளர் | – | 5 |
| களப்பணிஉதவியாளர் | – | 1 |
| மகப்பேறு ஆயா | – | 1 |
| துப்புரவு பணியாளர்கள் | – | 49 |
| **மொத்தம்** | – | **61** |

**பிறப்பு, இறப்பு :**

பிறப்பு, இறப்பு கணக்குகளை 5 சுகாதார ஆய்வர்கள் பதிந்துள்ளார்கள். நடப்பு ஆண்டில் பிறப்பு 1278 , இறப்பு 543 ம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மருத்துவம் மற்றும் நகர் நல மையம்**

இந்நகராட்சியில் ஒரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**பணியாளர்கள் விபரம்**

| | | |
|---|---|---|
| பல்நோக்கு சுகாதார பணியாளர் | – | 1 |
| துப்புரவு பணியாளர் | – | 3 |

**துப்புரவு :**

29 நவீன கழிப்பறைகள் அறிக்கையாண்டில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவையனைத்தும் சுயஉதவி குழுக்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி எல்லைக்குள் 20258 குடியிருப்பு வீடுகள் உள்ளன. அவற்றில் 1995ஆம் ஆண்டில் குறைந்த செலவிலான கழிப்பிடம்கட்டும் திட்டத்தின் கீழ் 1654 கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

34 பேட்டரி வாகனங்கள் , 28 தள்ளுவண்டிகள் மற்றும் LCV மூலம் குப்பைகள் சேகரிக்கப்பட்டு ஈரக்கழிவுகளை 4 நுண் உரமாக்கும் மையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு உரமாக்கப்படுகிறது.

**உரம் :**

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கலவை உரம் தயார் செய்ய தகுதியான 10 ஏக்கர் நிலம் சிறைக்காடு கிராமத்தில் வருவாய் துறையிடமிருந்து வாங்கப்பட்டு, உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**அச்சம் மற்றும் அருவருக்கத் தக்க தொழில்கள் :**

இத்தலைப்புல் குறிப்பிட்டுள்ள அனைத்து தொழில்களுக்கும் உரிமம் வழங்கப்பட்டது. எங்கெங்கு அவசியமோ அங்கெல்லாம் விசேட விதிமுறைகளை கடைபிடித்து வலியுறுத்தப்பட்டது. அறிக்கையாண்டில் தலைப்பில் அச்சம் மற்றும் அருவறுக்கதக்கதொழில் சட்டத்தின்கீழ் ரூ.3,70,695/– இத்தொழில்களுக்கு மன்றம் நிர்ணயித்தபடி கட்டணங்களும், மற்ற வணிகங்களுக்கு உரிய கட்டணங்கள் அறிக்கையாண்டில் வசூலிக்கப்பட்டது.

**கொரோனா தடுப்பு நடவடிக்கைகள்:**

இந்நகராட்சியில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக செயல்படுத்தப்பட்டுவருகிறது. கொரோனா தொற்று கண்டறிந்தவுடன் , நோயாளிகளை தனிமைப்படுத்துதல் முதல், சிகிச்சை முடிவுறும் வரை தொடர் கண்காணிப்பிற்காக நகராட்சி

அலுவலக வளாகத்தில் 24 மணி நேர WAR ROOM செயல்பட்டுவருகிறது. மேலும், அறிக்கை ஆண்டில் 354நபர்கள் கொரோனா சிகிச்சை பெற்று பூரண குணமடைந்தனர்.

**<u>காட்சிக் கடைகளும், திருவிழாக்களும் :</u>**

இந்நகரில் அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட திருவிழாக்கள் ஏதுமில்லை. இருப்பினும் இந்நகரிலிருந்து 3 கிலோமீட்டர் தொலைவிலுள்ள நகராட்சி நீர்வடிநிலையத்திற்கு அருகே உள்ள பரமசிவன் கோவில் திருவிழா ஆண்டுதோறும் நடைபெறும். இது ஒரு உள்ளூர் திருவிழா ஆகும். இதற்கு போடிநாயக்கனூரைச் சுற்றியுள்ள பொதுமக்கள் வந்து போவதுண்டு. இதற்கு நகராட்சி செலவில் போதுமான சுகாதார வசதிகள் வழக்கம் போல் செய்து தரப்பட்டது. அறிக்கையாண்டில் கூடும் மக்களுக்கு குடிநீர் வசதி ஏற்பாடு செய்யப்பட்டது.

**<u>குடும்ப நலத்திட்டம் :</u>**

இத்த்திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு 2007–2008ஆம் ஆண்டு முதல் குடும்நலஅறுவை சிகிச்சைகள் இலக்கு நிர்ணயம் செய்யப்படவில்லை. மேற்படி மகப்பேறு பணியாளர்களைக் கொண்டு ஒவ்வொரு வாரமும் புதன்கிழமையன்று தடுப்பு ஊசிமற்றும்போலியோசெட்டு மருந்துகள் போடப்பட்டுவரப்படுகிறது. பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத்திட்டத்தின் கீழ் அரசின் முழு மான்யத்தில் நகர் நல மையம் வரதராஜ் நகரில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு பின்புறம் நகராட்சிக்குசொந்தமான கட்டித்தில் இயங்கி வருகிறது. .

**<u>குடிநீர் வழங்குதல் :</u>**

1944ஆம் ஆண்டிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர்த்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்நகருக்கு சுமார் 16 கிலோமீட்டர் துாரத்திலுள்ள குரங்கணியிலிருந்து புவிஈர்ப்பு சக்திமுறையின் கீழ் கொட்டகுடி ஆற்றில் இருந்து நீர் எடுக்கப்பட்டு மேற்படி நீர், நகரிலிருந்து 3 கிலோமீட்டர் துாரத்திலுள்ள பரமசிவன் கோவில் பகுதியிலுள்ள நகராட்சி நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்தம் செய்யப்பட்டு குழாய்கள் வாயிலாக குடிநீர்நகருக்கு கொண்டு வரப்படுகிறது. பொதுமக்களுக்கு பொதுக்குழாய் வாயிலாக சுத்தம் செய்யப்பட்ட பாதுகாக்கப்பட்டகுடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. நகரில் குடிநீர்விநியோகம் கீழ்க்கண்டபடி விநியோகம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பொதுக்குடிநீர்குழாய்கள் | 210 |
| கை இறைப்பான் | 44 |
| விசைபம்பு | 189 |
| குடிநீர் குழாய் இணைப்பு | 13264 |

அரசாணை (நிலை)எண்.97,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, நாள் 12.07.2007–ன்படி அவ்வப்போது குடிநீர் குழாய் இணைப்பு கோரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் 122 புதிய குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**<u>2021–2022 ம் ஆண்டில் குடிநீர் கட்டணம் வசூல் :</u>**

| கேட்பு | வசூல் | நிலுவை | சதவீதம் |
|---|---|---|---|
| 10186000 | 7341000 | 2846000 | 72.06% |

**<u>பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் விபரம்</u>**

| | | |
|---|---|---|
| குடிநீர் சுத்திகரிப்பு நிலைய இயக்குபவர் | – | 2 |
| தலைமைநீர்வடிநிலைய பொருத்துநர் | – | 1 |
| குழாய் பொருத்துநர் | – | 2 |
| குழாய் பொருத்துநர் நிலை2 | – | 1 |
| பவர் டில்லர் ஓட்டுநர் | – | 1 |
| ஈப்பு ஓட்டுநர் | – | 1 |
| தலைமைநீர்வடிநிலைய காவலர் | – | 1 |
| ஜி.மெயின் டர்ன்கர்க் | – | 1 |
| ஜி.மெயின் லைன்மேன் | – | – |
| டி. மெயின் லைன்மேன் | – | - |
| நீர்வடிநிலைய சுத்திகரிப்புநிலைய துப்புரவர் | – | 1 |
| நீர்வடிநிலைய காவலர் | – | – |
| நீர்வடிநிலைய தோட்டக்காரர் | – | – |
| பொதுக்குழாய் துலக்குநகர் | – | 1 |

**<u>பாதாள சாக்கடைத்திட்டம் :</u>**

இந்நகரில் ரூ.7110.00லட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கான அரசாணை எண். 225, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 05.09.2012ன்படி நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பாதாள சாக்கடை பணிகள் துவங்கப்பட்டுள்ளது. அனைத்து பணிகளும் 30.04.2017க்கு முடிப்பதற்குள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பெற்றது. பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. 2021–2022 அறிக்கையாண்டில் 11085–இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**<u>பேரூந்துகள், போக்குவரத்து மற்றும் உரிமம் :</u>**

பழக்கடைகள்,பேரூந்துநிலையம்,பலன்தரும் மரங்கள் மற்றும் ஆடு,மாடு அடிக்கும் இடங்கள் வாயிலாக வருவாய்

| ஆண்டு | வருவாய்தரத் தக்க இனங்கள் | பேரூந்து நிலைய நுழைவு கட்டண உரிமம் | ஆடு,மாடு அடிக்க |
|---|---|---|---|
| 2021–2022 | 8085939 | 250200 | 340200 |

**<u>பேரூந்து நிலையம் :</u>**

அறிக்கையாண்டில் இந்நகராட்சி பேரூந்து நிலையம் ஒன்றை பராமரித்து வருகிறது. இப்பேரூந்து நிலையமானது மதுரை மண்டலபோக்குவரத்து அலுவலரது 10.9.1974ம் நாளிட்ட ஓ.மு.எண் கடிதப்படி ‘சி’ பிரிவாக வகுக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பேரூந்து நிலையம் தேனி மாவட்ட போக்குவரத்து அதிகாரியால் ‘சி பிரிவு பேரூந்து நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்நகரில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் மூலம் பொதுமக்கள் பயணம் மேற்கொள்ள பேரூந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அண்டை மாநிலம் கேரளாவிற்கு அதிக தொடர்புள்ள நகரமாகவும் வியாபாரம் சம்பந்தப்பட்ட போக்குவரத்து தொடர்புள்ள நகரமாகவுள்ளது.பேரூந்து ஒன்று நாள் ஒன்றுக்கு ரூ. 8/–வீதம் துறைமூலம் வசூல் செய்யப்பட்டு வந்தது. அறிக்கை ஆண்டில் பொதுஏலம்விடப்பட்டு ரூ.250200/–வருவாய் வந்ததுள்ளது.

**<u>பேரூந்துநிலைய மிதிவண்டிநிலையம்</u>**

பேரூந்து நிலைய வளாகத்தில்சைக்கிள் நிலையம் ஒன்று செயல்பட்டுவருகின்றது. அறிக்கையாண்டில் பொதுஏலம்விடப்பட்டதில் வருவாய் ரூ. 3,98,000/– ஆகும்.

**<u>ஆடு அடிக்கும் இடங்கள் :</u>**

அறிக்கையாண்டில் ஒரு ஆடுஅடிக்கும் இடம் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்தது.

| | |
|---|---|
| | <u>2021–2022</u> |
| ஆண்டு வருவாய்த் தொகை | 3,40,000 |

தனியார் ஆடு அடிக்கும் இடங்கள் எதுவும் இல்லை.

**<u>மரம் நடுதல் :</u>**

1999–2000ஆம் ஆண்டில் இந்திய சுதந்திர பொன்விழா ஆண்டு நினைவாக நகராட்சி நீர்த்தேக்கத்தொட்டியில் 35 பலன்தரும் மரங்கள் நடப்பட்டது. அறிக்கையாண்டில் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.92970/99/யு1,நாள். 5.2.2000த்தின்படி நகரின் முக்கிய பல பகுதிகளில்ல் 1050 மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டுவரப்படுகிறது.

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட 5 பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

1. வெங்கிட்டம்மாள் பூங்கா.
2. நகராட்சி பயணிகள் விடுதி முன்பாக உள்ள சோணைமுத்து பூங்கா.
3. போஜன் பூங்கா
4. நகராட்சிகுடிநீர் நிலையத்தில் உள்ள பூங்கா
5. சுப்புராஜ் நகர் பூங்கா.

அரசாணை எண் (டி)242,நகராட்சி நிர்வாகம் மற்றும்குடிநீர் வழங்கல துறை நாள் 20.10.94 உத்திரவு பிரகாரம், மேற்கண்ட ஐந்து பூங்கா இடங்கள், தமிழ்நாடு பூங்காக்கள், விளையாடுமிடங்கள் மற்றும் திறவிடங்கள் சட்டம் 1959,பிரிவு 5(3)(பி)–ன் கீழ் ஒப்புதல் செய்யப்பட்டு, மேற்கண்ட பட்டியலை தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்து, அதன் பின்னர், மேற்கண்ட பட்டியலை தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்து, அதன் பின்னர், மேற்கண்ட சட்ட பிரிவு 3(4)(நி)ன் கீழ் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.மேலும் மேற்குறிப்பிட்ட 5 பூங்காக்களில் வரிசை எண்.1 வெங்கிட்டம்மாள் பூங்கா இடத்தை பட்டியலிருந்து நீக்கிவிட்டு, வணிக வளாகம் கட்டுவதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.429, நாள் 31.7.2002ம் தீர்மானத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ந.க.எண்.2323/97/எப்1) மேற்குறிப்பிட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வெங்கிட்டம்மாள் பூங்கா, பூங்கா விளையாடுமிடம் மற்றும் திறவிடம் சட்டம் 1959பிரிவு 5(3)–ன் கீழ் ஒப்புதல் செய்யப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கம் செய்ய அனுமதி வழங்கியுள்ளது, மேற்காணும் விபரம் குறித்து, ஒப்புதல் செய்யப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கம் செய்ய, அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**<u>விளையாட்டு மைதானங்கள் :</u>**

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் .க.எண்.19432/2000/கே10, நாள்.19.5.2000த்தின்படி இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட முக்கிய இடங்களில் 5 விளையாட்டு மைதானங்கள் பொதுநிதியில் இருந்து அமைக்கப்பட்டு விளையாட்டு மைதானங்களுக்கு தேவையான விளையாட்டு பொருட்கள் மற்றும் பாதுகாப்பு அறை நகராட்சியின் மூலம் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

மேற்படி விளையாட்டு மைதானங்களில் அரசு அறிவுறுத்தியபடி இளையோர் மையங்கள் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு மையத்திற்கு தலைவர், செயலாளர், பொருளாளர் அடங்கிய குழுக்கள் செயல்பட்டு வருகிறது.

**<u>நகரமைப்பு :</u>**

நகரமைப்பு பிரிவில் உள்ள பணியாளர்கள் விபரம்:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நகரமைப்பு அலுவலர் | – | 1 | (காலியிடம்) |
| 2. | நகரமைப்பு ஆய்வாளர் | – | 2 | |
| 3. | உதவி வரைவாளர் | – | 1 | (காலியிடம்) |
| 4. | சங்கிலியாளர் | – | 2 | |

**<u>நகரமைப்பு :</u>**

இந்நகராட்சியில் ஏழு அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டங்கள் உள்ளன. அவைகளின் தற்போதைய நிலைகள்.

**<u>1. ஜக்கமநாயக்கன்பட்டி அபிவிருத்தித்திட்டம் :</u>**

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–ன்படி சென்னை, நகர் மற்றும்ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் எண். 40374/77–ல் அங்கீகரிக்கப்பட்டது. இத்திட்டம் தமிழ்நாடு அரசிதழில் 28.2.79ம் தேதி பிரசுரம் செய்யப்பட்டது. தினத்தந்தி நாளிதழில் 24.3.79ம் தேதி பிரசுரம் செய்யப்பட்டு நடவடிக்கையில் இருந்து வந்தது. திட்டப்பகுதியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளை விரிவு அபிவிருத்தி திட்டத்தில் சேர்த்து புதுநிலைப்படுத்தலின் மறு ஆய்வு ஒருங்கிணைந்த திட்ட மாற்றம் தயாரித்து அளிக்க நகர்ஊரமைப்பு ஆணையர் அவர்களை உள்ளூர் திட்டகுழுமம் கேட்டுக்கொண்டபடிமறுஆய்வு ஒருங்கிணைந்த திட்ட மாற்றம் தயாரிக்க நகரளவு இறுதி பதிவேடு மற்றும் வரைபடம் ஆகியவைகளை கோரப்பட்டுள்ளது, மேற்படி புதிய வரைபடங்கள் பெற்றவுடன் மறுஆய்வு ஒருங்கிணைந்த திட்ட மாற்றம் வரைபடம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவுள்ளது,

**<u>2. குலாளர்பாளையம் அபிவிருத்தித்திட்டம் :</u>**

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–ன்படி சென்னை, நகர் மற்றும்ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.15283/94/டிபி2,நாள்.30.6.94–ல் அங்கீகளீக்கப்பட்டது. இத்திட்டம் தமிழ்நாடு அரசிதழில் எண்.49, பிரிவு 1/94ல், நாள் 21.12.94ல் பிரசுரம் செய்யப்பட்டது. இத்திட்டத்தினில் கண்டுள்ளபடி அபிவிருத்திக்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மறுஆய்வு செய்வதற்கு, சென்னை, நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால், நடவடிக்கையில் உள்ளது.

**<u>3. நடுப்பட்டி அபிவிருத்தித்திட்டம் :</u>**

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–ன்படி சென்னை, நகர் மற்றும்ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண்.1528394/டிபி2,நாள். 7.7.94–ல் அங்கீகரிக்கப்பட்டது. இத்திட்டம் தமிழ்நாடு அரசிதழில் பாகம் எண்.4, பிரிவு1 பக்கம் எண்.1236,நாள்.21.12.94ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினில் கண்டுள்ளபடி அபிவிருத்தி பணிக்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மறு ஆய்வு செய்வதற்கு, சென்னை, நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் நடவடிக்கையில் உள்ளது.

**<u>4 நடுப்பட்டி கிழக்கு விஸ்தரிப்பு அபிவிருத்தித்திட்டம்</u>**

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–ன்படி சென்னை, நகர் மற்றும்ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண்.15284/94/டிபி2,நாள்.13.7.94–ல் அங்கீகரிக்கப்பட்டது. இத்திட்டம் தமிழ்நாடு அரசிதழில் பாகம் எண்.4, பிரிவு 1 பக்கம் எண்.1234, மற்றும் 1235 நாள்.21.12.94ல் பிரசுரம் செய்யப்பட்டது. தினத்தந்திநாளிதழில்9.12.94ம் தேதி பிரசுரம் செய்யப்பட்டது. இத்திட்டத்தினில் கண்டுள்ளபடி அபிவிருத்தி பணிக்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2003–2004 வருடத்திற்கு இலக்கு நிர்ணயம் செய்து, மறு ஆய்வு செய்வதற்கு, மதுரை, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மூலமாக, சென்னை, நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**<u>5 புகைவண்டி நிலைய அபிவிருத்தித்திட்டம் : 1</u>**

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–ன்படி சென்னை, நகர் மற்றும்ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.15231/94/டிபி2,நாள்.30.6.94–ல் அங்கீகரிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசிதழில் பாகம் எண்.4, பிரிவு 1 பக்கம் 1236,நாள் 21.12.94ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. தினத்தந்தி நாளிதழில் 9.10.94ம்தேதி பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இதில் கண்டுள்ளபடி அபிவிருத்தி பணிக்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>6 புகைவண்டி நிலைய அபிவிருத்தித்திட்டம்: 2</u>**

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–ன்படி சென்னை, நகர் மற்றும்ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.36873/94/டிபி2,நாள்.20.1.95–ல் அங்கீகரிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்ய அரசிதழின் பணி மேலாளர், அரசு மைய அச்சகம், தங்கச்சாலை,சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தினத்தந்திநாளிதழில் 14.5.95ம் நாள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினில் கண்டுள்ள அபிவிருத்தி பணிக்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>7 புகைவண்டி நிலைய அபிவிருத்தித்திட்ட ம்: 3</u>**

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 19(1)ன் கீழ் விரிவு அபிவிருத்தித்திட்டம் தயார் செய்து ஒப்புதல் வழங்குதலின் பேரில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வரைபடம் எண்.1 மதுரை, துணை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் தயார் செய்யப்பட்டு கடிதம் எண்.2752/2000,மம4 நாள்12.10.2000ன் படி வரப்பெற்றதை உள்ளூர்த் திட்டகுழு தீர்மானம் எண்.98, நாள்.26.12.2000–ன் படி படிவம் எண்.1, மாவட்ட அரசிதழ் மற்றும் நாளிதழ் பிரசுரம் செய்ய ஒப்புதல் செய்யப்பட்டு மாவட்ட அரசிதழில் 19.09.2001ல் பிரசுரம் செய்யப்பட்டது. மேலும் 18.04.2001ம் தேதியில் தினகரன் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விரிவு அபிவிருத்தித்திட்டப்பகுதியில் அடங்கும் சர்வே எண்கள் திருத்தப்பட்ட செட்டில்மெண்ட் சர்வேயின் பிரகாரம் தயார் செய்யப்பட்டபடியால், நில அளவை துறை உதவி இயக்குநர் அவர்களிடம், சர்வே ஆவணங்கள் கோரப்பட்டுள்ளது. மேலும், நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் அவர்களின் ந.க.எண்.2752/2000/மம4, நாள் 22.8.2003 கடிதத்தின் பிரகாரம்,இத்திட்டத்திற்கான வரைபடம் எண்.2 தயாரிக்கப்பட்டு, இவ்வலுவலகத்தில் பெறப்பட்டது. மேற்காணும் திட்டத்தை பொதுமக்களுக்கு விளக்கும் பொருட்டு, 12.11.2003ம் தேதி, நில உரிமையாளர்கள் கூட்டம் நகர்மன்றக் கூடத்தில் நடத்தப்பட்டது.மேற்காணும் கூட்டத்தில், திட்டம் சம்பந்தமாக நிலஉரிமையாளர்களிடமிருந்து ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டது.அவற்றை படிவம் எண்.10ல் தயார் செய்து உள்ளூர் திட்டக்குழு ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது. உள்ளூர்த்திட்டக்குழு தீர்மானத்துடன், சென்னை, நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் இணக்கத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**<u>முழுமைத்திட்டம் :</u>**

இந்நகராட்சியில் முழுமைத் திட்டம் அரசாணை எண்.190,நாள். 14.2.1991ல் அங்கீகரிக்கப்பட்டு இத்திட்டத்தில் கண்டுள்ளபடி வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சென்னை, நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் 9.3.97ம் நாளிட்ட சுற்றறிக்கை 3891/96/டிபி4–ன் படி தமிழ்நாடு நகர்ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 24(2)ன் கீழ் அரசின் இணக்கம்பெற புதுநிலைப்படுத்தப்பட்ட முழுமைத்திட்டம் தயார் செய்து 12.3.97ல் அரசுக்கு, சமர்ப்பிக்கப்பட்டது. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை(UD IV 2) அரசாணை நிலை எண்.117, நாள்16.4.98–ன்படி அரசு இணக்கம் அளித்ததின் பேரில் விதி15ன் கீழ் பிரசுர நடவடிக்கையில் உள்ளது. முழுமைத்திட்டம் தயாரித்தல் விதி15ன் கீழ், மேற்கண்ட முழுமைத்திட்ட ஒப்புதல் அறிவிப்பினை, தமிழ்நாடு அரசிதழில், 6.12.2000ம் தேதி, பாகம் என பிரிவு 1, பக்கம் 516 இல் வெளியிடப்பட்டு, முழுமைத்திட்டத்திற்கான பொதுமக்களின் ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் கோரப்பட்டது. பின்னர், தினசரி நாளிதழில் 23.9.2001ம் தேதி பிரசுரம் செய்யப்பட்டது. உள்ளூர் அரசு அலுவலக விளம்பர பலகைகளில் மேற்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனை தொடர்ந்து, முழுமைத்திட்டத்திற்கு பெறப்பட்ட ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகளை, உள்ளூர்த் திட்டக்குழுவின் அங்கீகாரத்திற்கு வைக்கப்பட்டு, உள்ளூர்த்திட்டக்குழு தீர்மானந எண்.12,நாள் 6.2.2002ல், தீர்மானிக்கப்பட்டபடி, முழுமைத்திட்டத்திட்டத்தினை , இறுதி ஒப்புதலுக்கு அனுப்பி

வைக்க ஏதுவாக, கருத்துரு தயார் செய்து வழங்க, மதுரை, நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு, இவ்வலுவலக ந.க.எண்.8598/96/எப்1,நாள்13.2..2002ன் பிரகாரம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மதுரை, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில், முழுமைத்திட்டக்கருத்துரு தயார் செய்யப்பட்டு மறு ஆய்வு ஒப்புதலுக்காக சென்னை, நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளது

<u>**கட்டிட விண்ணப்பங்கள் அனுமதி கட்டணம்:**</u>

| | |
|---|---|
| 2021–22 ஆம் ஆண்டில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 178 |
| 2021–22 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 152 |
| 2021–22 ஆம் ஆண்டில் அனுமதி மறுக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 26 |
| 2021–22 ஆம் ஆண்டில் பெறப்பட்ட கட்டிட அனுமதி கட்டணம் | ரூ. 3,90,524 |

<u>**ஆக்கிரமிப்பு :**</u>

நகராட்சி எல்கைக்குட்பட்ட சில தற்காலிகஆக்கிரமிப்புகள் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும், பொது சுகாதாரத்திற்கும் இடையூறாக இருந்தவை வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை ஆகிய துறைகளுடன் இணைந்து காவல்துறை ஒத்துழைப்புடன் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழிகாட்டுதலின்படி அகற்றப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | 2021–2022ஆம் ஆண்டில் தற்காலிக ஆக்கிரமிப்பு மூலம் பெறப்பட்ட வரவு ரூ. | –– |
| 2. | அறிக்கையாண்டில் ஆரம்பத்தில் நிலுவையிலுள்ள ஆக்கிரமிப்புகள் | |
| 3. | அறிக்கையாண்டில் கண்டு பிடிக்கப்பட்டவை | |
| | நிரந்தரம் | –– |
| | தற்காலிகம் | –– |
| 4. | அப்புறப்படுத்தப்பட்டவை | –– |
| 5. | மொத்த நிலுவையிலுள்ளவை | –– |
| | மொத்தம் | ––––– |

ஆ. நகர நல அளவை சார்பு ஆய்வாளரும்,ஒரு களப்பணி உதவியாளரும் சர்வே செய்து ஆக்கிரமிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பித்து வருகின்றனர். உடனுக்குடன் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு வருகின்றன.

<u>**பொது வருவாய் :**</u>

ஆண்டு வாடகை மதிப்பின்பேரில் கட்டிடங்களுக்கு அரையாண்டு விதிக்கப்படும் வரிகள் பின்வருமாறு:

| | |
|---|---|
| பொதுக் காரியங்களுக்கான வரி | 6.5% |
| தண்ணீர் மற்றும் சாக்கடை வரி | 4% |
| விளக்கு வரி | 3.5% |
| துப்புரவு வரி | 2.5% |
| கல்வி வரி | 2.5% |
| நூலகவரி (கல்வி வரி நீங்கலாக இதர இனங்களுக்கு) | 0.10 பைசா. |

**விவசாய நிலங்களுக்கான வரி :**

தமிழ்நாடு அரசாணை(நிலை) எண்.134,ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை 19.3.81–ன்படி 1981–82ஆம் ஆண்டு முதல் விவசாய நிலங்களுக்கான வரி ரத்து செய்யப்பட்டது.

**காலிமனைகளின்பேரில் வரி :**

| | |
|---|---|
| பொதுக்காரியங்களுக்கு | 1/4 |
| தண்ணீர் மற்றும் சாக்கடை வரி | 1/8 |
| மல வரி | 1/4 |
| கல்வி வரி | 1/16 |
| | ------ |
| | 11/16 |

**தொழில் வரி :**

நகராட்சி நிர்வாகம் மற்றும்குடிநீர் வழங்குதுறையின் அரசாணை எண். 249, நாள் 28.12.90–ன்படியும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம்(இரண்டாவது திருத்தம்) 1998–ன்படியும் 1.10.98 முதல் தொழில்வரி தொழில் புரிவோர் மற்றும் பல்வேறு தொழில்களுக்கும் நிர்ணயம் செய்யப்பட்ட தொழில்வரி தொகைக்கான படிவங்களை மேற்படியாருக்கு வழங்கப்பட்டு நிர்ணயம் செய்யப்பட்ட தொழில்வரி வசூல் செய்யப்பட்டு வரப்படுகிறது. 2021–2022ம் ஆண்டிற்கு ரூ.3608161/– கேட்பு நிர்ணயிக்கப்பட்டு ரூ.3363031/– வசூலிக்கப்பட்டுள்ளது.

**நடப்பு கேட்பு மீது நடப்பு வசூல் :**

ஆண்டு கணக்குகளுடன் குடிநீர்க் கட்டணம் தவிர 65.98%, கேட்பு வசூல், இணைக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் வசூல் செய்யக்கூடிய கேட்பில் வசூல் 78.97% ஆகும். சென்ற ஆண்டு 74.47% ஆகும்.

**வரவு செலவுத்திட்டம் :**

| | |
|---|---|
| மொத்த வரவினங்கள் | 1022.15 |
| மொத்த செலவினங்கள் | 1508.61 |

**கடன்கள் :**

| | |
|---|---|
| ஆண்டு ஆரம்பத்தில் | 31.76 |
| அறிக்கையாண்டில்பெறப்பட்ட கடன்தொகை | 1110.50 |
| | -------- |
| மொத்தம் : | 1142.26 |
| அறிக்கையாண்டில் அசலுக்கு திரும்ப செலுத்திய கடன் தொகை | 94.62 |
| | --------- |
| ஆண்டு இறுதியில் நிலுவை | 1047.64 |
| | --------- |

**முதலீடுகள் :**

| | |
|---|---|
| அறிக்கையாண்டில் ஆரம்ப இருப்பு | – |
| முதலீடு செய்யப்பட்ட தொகை | – |
| | ------------- |
| மொத்தம் : | – |
| முதலீடு திரும்பப் பெற்றது | –– |
| | -------------- |
| ஆண்டு இறுதியிலிருந்த முதலீட்டுத்தொகை : | – |

**நிலுவையிலுள்ள தணிக்கைத்தடைகளின் எண்ணிக்கை :**

| | |
|---|---|
| ஆண்டு ஆரம்பத்திலுள்ள தணிக்கைத்தடைகள் | 24 |
| புதிதாக எழுப்பப்பட்டவை | 83 |
| மொத்தம் | 107 |
| நீக்கம் செய்யப்பட்டவை | 6 |
| ஆண்டு இறுதியில் நிலுவை | 1 01 |

**வழக்குகள் :**

| | | |
|---|---|---|
| சென்ற ஆண்டு நிலுவையிலுள்ள வழக்குகள் | .. | 10 |
| நடப்பாண்டு வழக்குகள் | .. | 1 |
| மொத்தம் | .. | 11 |
| அறிக்கையாண்டில் முடிவுபெற்ற வழக்குகள் | .. | – |
| நிலுவையிலுள்ள வழக்குகள் | .. | 11 |

**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத்திட்டம் (பாலர் பள்ளி)**

தமிழ்நாடு சத்துணவுத் திட்டத்தின் கீழ் போடிநாயக்கனூர் நகராட்சிக்கு 21 மையங்கள் திறக்க தமிழ்நாடு அரசு சமூகநலத்துறை கடித எண்.72800/1/82, நாள் 4.9.82ல் அனுமதிக்கப்பட்டு 15.9.82ம் நாள் முதல் செயல்பட்டு வந்தன.

அரசாணை எண்.290,சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டம், நாள் 18.6.91 மற்றும் சமூக நலத்துறை இயக்குநர் (ஐசிடிஎஸ்)சென்னை அவர்களின் 13.3.91ம்தேதிய ந.க.எண்13927/ ஐசிடிஎஸ்1(1)/90 நாள் 17.7.91 கடிதங்களின்படி 21 குழந்தைகள் நல சத்துணவுத்திட்ட மையங்களையும்அதன் பணியாளர்களையும். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம், தேனியில்இவ்வலுவலக ந.க.எண்.5382/91/என்எம்2 நாள். 31.7.91 செயல்முறையின்படி 31.7.91ம் தேதி பிற்பகல் ஒப்படைக்கப்பட்டுள்ளளது.

**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத்திட்டம் (பள்ளிகள்)**

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம், அரசாணை எண்.1370, ஊர்வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள் 7.9.82ன்படி 15.9.82 முதல் நகராட்சியின் பராமரிப்பில்ல் உள்ளது. இந்நகராட்சியில் 4 பள்ளிகள் இத்திட்டத்தில் பயன்பெறுகின்றன. 4 பள்ளிகளிலும் தனித்தனி சமையல் கூடங்கள் கட்டப்பட்டு தனித்தனியாக சமையல் தயார் செய்யப்பட்டு வருகிறது. இப்பணியை கவனிக்கும் பொருட்டு ஒவ்வொரு பள்ளிக்கும் ஒவ்வொரு அமைப்பாளர் நியமனம் செய்யப்பட்டு சமையல் நல்லமுறையில் கவனிக்கப்பட்டு வருகிறது.

நகராட்சி எல்லைக்குள் உள்ள. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த 19 தனியார் பள்ளிகள் மற்றும் அரசுப்பள்ளிகள் சென்னை, சமூக நலத்துறை மற்றும் சத்துணவுத்திட்ட(ச.உ.தி.1) துறையின் 10.7.97ம் தேதிய அரசாணை(நிலை)எண்.227ன்படி இந்நகராட்சியின் கட்டுப்பாட்டிற்கு 16.10.97 முதல் கொண்டுவரப்பட்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் இத்திட்டத்தில் மொத்தம் 3375 ஆண் மற்றும் பெண் குழந்தைகள் பயன்பெற்றுள்ளார்கள். அதில் 999 குழந்தைகள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் ஆவர்.

**<u>பொது :</u>**

அறிக்கையாண்டில் நிதிநிலைமை சீராக இருந்தது. அறிக்கை ஆண்டில் யாதொரு தொற்றுநோயும் பரவவில்லை. இந்நகர் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்பட்டது. நகராட்சியின் நிதிநிலையை பொறுத்து சாலை பராமரிப்பு, சாக்கடை வசதி, விளக்கு வசதி ஆகியவை செய்து கொடுக்கப்பட்டன.

நகராட்சி நிர்வாகம் சிறந்த முறையில் செயல்பட ஒத்துழைப்பு நல்கிய நகர்மன்றத்தலைவர், நகர்மன்றத் துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்,
போடிநாயக்கனூர் நகராட்சி

<u>தேனி மாவட்டம்</u>

# போடிநாயக்கனூர் நகராட்சி

# நிர்வாக அறிக்கை
# 2021 – 2022